தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக இந்தித் திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் , ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் ஆகியோர் தலைமையில் சுப்புலாபுரம் ஊராட்சியில் நடைபெற்றது. தேனி தெற்கு மாவட்ட கழக செயலாளர் கம்பம் இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ., தீர்மான குழு இணை செயலாளர் ஜெயக்குமார், எழுத்தாளர் மதிமாறன், இளம் பேச்சாளர் கனிஷ்க. ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். ஆண்டிபட்டி பேரூர் செயலாளர் பூஞ்சோலை சரவணன் நன்றி உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் I நிர்வாகிகள் பொது மக்கள் சார்பு அணியினர் கலந்து கொண்டனர்.

எம்.எம்.அப்துல்லா எம்.பி.சிறப்புரை! தமிழ்நாடு மீதான

ஒன்றிய அரசின் தாக்குதலை எதிர்த்து முதல்வர் வெற்றி பெறுவார்!

திருப்பத்தூரில் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு

சிவகங்கை. மார்ச் 13-

ஒன்றிய அரசு மும் மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்திமொழியைத் 'திணிப்பதை கண்டித்தும், தமிழகத்திற்கு உரியநிதி வழங்காததைக் கண்டித் தும்,தொகுதி மறு சீரமைப் பினால் நாடாளுமன்றத் தொகுதிகள் குறைக்கப்படு வதைக் கண்டித்துக் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மாநில இளைஞரணி செய லாளர்துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் ஆலோ சனையின்பேரில் ஒன்றிய அரசை கண்டித்து கடந்த 5ம் தேதி முதல் 234 சட்ட மன்ற தொகுதிகளில் கண் டன பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதன் படி சிவகங்கை மாவட்ட திருப்பத்தூர் அண்ணா திடலில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந் தில் குமார் தலைமையில் ஒன்றிய செயலாளர் எஸ். சண்முக வடிவேல், பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த் திகேயன், பேரூராட்சி மன் றத் தலைவர் திருமதி கோகிலா ராணி நாராய ணன், துணைத் தலைவர் கான்முகமது ஆகியோர் முன்னிலையில் கண்டன பொதுக்கூட்டம் நடை பெற்றது.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வைகைஇள மாறன் பேரூர், அமைப்பா ளர் பஷிர் முகமது ஆகி யோர் வரவேற்றுப் பேசி னார்கள். இளைஞரணி நிர்வாகிகள் எஸ். குமார், மனோகரன்,எஸ். திருநா வுக்கரசு, பி.சரவணன் ஆகி யோர் தொகுப்புரை வழங் கினார்கள்.

இந்த கண்டன பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது-:

தமிழகத்தில் 50 ஆண்டு களுக்கு மேலாக இரு மொழிக் கொள்கைதான் உள்ளது. உலகம் முழுவதும் மாநிலம் முழுவதும் இந்திய அளவில் இருமொழிக் கொள்கை முலம் படித்த தில் தமிழர்கள் உயர் பொறுப்புகளில் வகித்து வருகிறார்கள். இதை பொறுத்துக்கொள்ள முடி யாத ஒன்றிய அரசு மும் மொழித் கொள்கை என்ற பெயரில் இந்தி மொழியை திணிக்க முயற்சி செய்கிறது .தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் நாடாளு மன்ற தொகுதிகளை குறைக்க திட்ட மிட்டுள் ளது. நமக்கு உரிய நிதி யினை தரவும் மறுக்கிறது. இத்தகைய ஒன்றிய அரசின் பாரபட்ச போக்கினை கண் டித்து முதல்வர் அவர்கள் பல்வேறு சீரிய நடவடிக்கை களை எடுத்து வருகிறார். ஒன்றிய அரசின் இத்தகைய போக்கினை தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். தலைவர் கலை ஞர் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து இந்திய அளவில் எவ்வாறு வெற்றி பெற்றாரோ அதே வழியில் தமிழக முதல்வர் அவர்கள் சாதுர்ய மாக காய்களை நகர்த்தி வருகிறார் .இதில் முதல்வர் அவர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார். அதற் காக மதிநுட்பம் வியூகம் முதல்வரிடம் உள்ளது. இதற்காக சென்னை யில்5ம்தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சிகள் கூட் டத்தில் முதல்வரின் முடி வினை ஒன்றுபட்டு ஆதரித் தார்கள் . பாஜகவை தவிர அனைத்து கட்சிகளும் பிரச் சனைகளை புரிந்து கொண்டு தமிழக முதல்வரு டன் ஒன்றிணைந்து செயல் பட உள்ளார்கள் . தென் மாநிலங்களை பாதிக்கும் மறுசீரமைப்பு தொகுதி பிரச்சினையை முதல்வர் கையில் எடுத்ததால் தென் மாநிலங்களில் ஆதரவு அதி கரித்து வருகிறது.இதற்காக வருகிற 22ம்தேதி சென் னையில் முதல்வர் அவர்கள் தலைமையில் தென் மாநில முதல்வர்கள் மற்றும் அரசி யல் கட்சி நிர்வாகிகள் பங் கேற்கும் ஆலோசனை கூட் டம் நடைபெற உள்ளது .இதில் நிச்சயமாக எடுக்கப் படும் முடிவுகள் ஒரு மாற் றத்தை ஏற்படுத்தும் ..தமி ழக முதல்வர் இந்த பிரச்சி னையில் எளிதாக வெற்றி பெறுவார் . இதுவரை முதல் வர் மேற்கொண்ட பல் வேறு பிரச்சினைகளில் அவர் வெற்றி பெற்றுள் ளார். மூன்றாவது முறை யாக ஆட்சிக்கு வந்த பா.ஜ.க .அரசு பல்வேறு வழிகளில் நம் செயல்பாடு களை தடுக்க நினைக்கிறது. ஒன்றிய அரசு தலை விரித்து ஆடுகிறது. வெறித்தனமாக ஆட்சி நடத்தி வருகிறது. ஒன்றிய பா.ஜ.க அரசு மாற் றான் தாய் மனப்பான்மை யுடன் செயல்பட்டு வருகிறது.

ஒரே மொழி, ஒரே நாடு ,ஒரே தேர்தல், என்ற முழக் கம் எழுப்புவது நாட்டிற்கு பேராபத்தை ஏற்படுத்தும்.. பேரறிஞர் அண்ணா, தலை வர் கலைஞர் அவர்கள் மாநில அளவில் தேசிய அள வில் பல்வேறு முடிவுகளை எடுத்ததால் பேராபத்துகள் தவிர்க்கப்பட்டது .நாடும் காப்பாற்றப்பட்டது. அதே வழியில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்க ளும் திட்டமிட்டு செய லாற்றி வருகிறார் . இவரது நடவடிக்கைகளினால் நாடு அபாயத்திலிருந்து காப்பாற் றப்படும் . ஒன்றிய அரசு மாநில மக்களின் உணர்வு களை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் . இந் திய நாட்டில் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு மொழி, இனம் ,கலாச்சாரங் கள் உள்ளது. அதற்கு ஏற்ப ஒன்றிய அரசு செயல்பட வேண்டும். அரசியலுக்கு அப்பாற்பட்டு தமிழக மக் களை பாதுகாக்கும் இயக்க மாக தி.மு.க .விளங்கி வரு கிறது. மக்களும் கழகத் தலைவர் முதல்வர் தலை வரை நம்பி உள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்ட ஐந்து கொள்கை களை இன்றும் கழகம் கடைப்பிடித்து வருகிறது . முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் கலைஞர் வகுத்த பாதையில் தலைவர் தளபதி அவர்கள் கொள்கை பிடிப் புடன் கட்சியையும் , ஆட்சியையும் நடத்தி வருகிறார்.

தமிழக முதல்வர் அவர் கள் எடுத்த முடிவு தமிழ கத்தை கடந்து தென் மாநி லங்களில் உள்ள மொழி களை பாதுகாத்திடும் வகை யில் அமைந்துள்ளது. எனவே அனைத்து மொழிக ளையும் பாதுகாக்கும் தலை வராக கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் விளங்கி வருகிறார்கள். இதற்கு தமிழக மக்கள் தொடர்ந்து முதல்வர் அவர் கள் மேற்கொள்ளும் நடவ டிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவு தரவேண்டும்.

முதல்வரின் நடவடிக்கை களை ஒவ்வொன்றாக மக் கள் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார்கள் . இந்த பிரச்சினையில் கழக தலைவர் முதல்வர் தளபதி எடுக்கும் முடிவுகளை சிவ கங்கை மாவட்ட கழகம் முழுமையாக நிறை வேற் றும் என்ற உறுதியினை இக் கூட்டத்தின் முலம் தெரி வித்துக் கொள்கிறேன்..

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார்.

தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிக்கான் மற்றும் பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல். எம். பாண்டி ஆகியோர் தலைமையில் வடுகபட்டி பேரூர் பகுதியில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. மாநில அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி.சரவணகுமார் எம்எல்ஏ உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எல்.மூக்கையா. பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம்.இளம் பேச்சாளர் முத்து செல்வம். ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள் வடுகபட்டி பேரூராட்சி தலைவர் நடேசன் முன்னிலை வகித்தார் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தர்மேந்திர பிரதானே தமிழர்களிடம் மன்னிப்புக் கேள்!

அறிஞர் அண்ணாவின் முக்கியமான கொள்கையே இருமொழிக் கொள்கைதான். அதைத்தான் தமிழ்நாடு முதல்வர் உறுதியாகவும் உரக்கவும் கூறி ஒன்றிய பா.ஜ.க. மைனாரிட்டி அரசின் மும்மொழிக் கொள்கையை என்றும் ஏற்க மாட்டோம், இந்தி, சமஸ்கிருதத்தை திணிக்க நினைக் கும் புதிய தேசிய கல்விக் கொள்கையையும் ஏற்க மாட்டோம் என்று கூறியுள்ளார்.

இதைத்தான் நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் வலியுறுத்திப் பேசி தமிழ்நாடு கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதி ரூ. 2152 கோடியை உடனே விடுவியுங்கள் என்று சொரணையற்றப் பா.ஜ.க.வினரிடம் சொரணை யுள்ள நம் எம்.பி.க்கள் கேட்டனர்.

கிட்டதட்ட ரூ.2 லட்சம் கோடி ஜி.எஸ்.டி. மூலம் மட்டுமே தமிழ்நாட்டிலிருந்து வசூலிக்கும் பா.ஜ.க. அரசு மற்ற வரிகள் மூலம் எவ்வளவு வசூலிப்பார்கள் என கணக்குப் போட்டால் தமிழ்நாடு தான் அதிக நிதியை தரும் மாநிலங்களில் இரண் டாவதாக விளங்குமென்பதில் ஆச்சரியமில்லை.

தமிழ்நாட்டு மக்களின் நிதியை வரியாகப் பெறும்போது இனிக்கிறது. எங்களுக்கான நிதியை உரிமையுடன் கேட் டால் எரிகிறதா முதலில் பி.எம்.ஸ்ரீ பள்ளிக்கு நம்முதல்வர் ஒத்துக் கொண்டாராம், பிறகு தற்போது பின்வாங்கி விட்டா ராம். அதற்குக் காரணம் யாரோ ஒரு சூப்பர் முதல்வராம்! தர் மேந்திரபிரதான் என்ற கல்வி அமைச்சராக இருக்க தகுதி யற்ற தற்குறி விஷத்தைக் கக்கி உள்ளது.

விஷம் மட்டுமல்ல! குழப்பத்தையும், குதர்கத்தையும், சந் தேகத்தையும் தி.மு.க.வில் ஏற்படுத்த முடியுமா என்று முழுப் பொய்யை கூறியுள்ளார். 1949லிருந்து தி.மு.க.வில் குழப் பம் ஏற்படுத்த முயன்ற கோள்மூட்டிகள், குறுக்குபுத்தி யாளர்கள் தோற்றுப் போனது தான் வரலாறு தரும் பாடம். எழுத்தால், பேச்சால், இணையற்ற உழைப்பால், உடன் பிறப்புகளின் உறுதியால் நிமிர்ந்து நிற்கும் எஃகுக் கோட்டையே தி.மு.க.

ஒடிசாவிலிருந்து ஒண்டிப்பிழைக்க டெல்லிச் சென்ற தர் மேந்திரப்பிரதான் தமிழர்களை தரங்கெட்ட வார்த்தைக ளால் அநாகரிகமானவர்கள் என்று பேசிட இரண்டு பெண் எம்.பி.க்கள் பெரியாரின் பிள்ளைகள் கனிமொழி கருணா நிதி எம்.பி., தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., இருவரும் விழி சிவக்க நாடாளுமன்றமே நடுநடுங்க புறநானூற்றுப் போர் மறத்திகளாக போர் முரசம் எழுப்ப முண்டாக்கட்டிய தர் மேந்திரபிரதான் மிரண்டுப் போய் அச்சத்திற்கு ஆளாகி தவ றான சொற்களை திரும்பப் பெற்றார்.

மன்னிப்புக் கேட்க வேண்டியவர் யாரிடம்? எட்டு கோடித் தமிழர்களிடம்! மன்றாடிக் கெஞ்சியுள்ளார். நாக்பூர் நயவஞ் சகர்களின் நாவிற்கு நடனமாடும் அடிமை நாவடக்கமின்றிப் பேசியுள்ளார்.

ஏனப்பா எங்களுக்கு மும்மொழி எதற்கப்பா? இன்பத் தமிழ் இருக்க அரவணைப்பு மொழியாக ஆங்கிலம் இருக்க எதற்கு எங்களுக்கு மூன்றாவது மொழி? அந்த மூன்றாவது மொழியும் இந்தி என்றோ சமஸ்கிருதம் என்றோ தைரியமாகக் கூற தெம்பற்றவர் களே! ஏன் திணறுகிறீர்கள்? இந்தி என்றால் எங்கே ஈட்டிப் பாயுமோ என்ற பயமா?

வி.பி.கலைராஜன்
கழக இலக்கிய அணிச் செயலாளர்

இந்த நேரம் எங்கள் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் இல் லையே என்கிற ஏக்கம் வரத்தான் செய்கி றது. இருந்தாலும் அந்த மூவரின் வடிவில் நம்முதல்வர் அவர்கள் மாநில உரிமைக் காக கோடிக்கணக்கான தமிழர்களின் குர லாக தர்மேந்திரபிரதானுக்கு நாவடக்கம் தேவை! பொய் பேசுவதை ஒன்றிய அமைச் சர் நிறுத்திட வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளார். இது அறைகூவல் மட்டுமல்ல அரை விட்டுள்ளார்.

தமிழின் பெருமை அவர்களுக்கு எங்கே தெரியப் போகி றது? இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் 58000 என்று கூறப்படுகிறது. அதில் தமிழ் கல்வெட்டுக்கள் மட்டும் 30000 கல்வெட்டுக்கள். மொத்தத்தில் தென்னிந்தி யாவில் 44000 கல்வெட்டுக்கள். இது தெரியுமா தர்மேந்திர பிரதானே! கேட்டு வாங்கித் தெரிந்து கொள்ளுங்கள்.

செவ்வாய் கிரகத்திற்கு 9 முறை செயற்கைக்கோள் அனுப்பி தோல்வியுற்ற அமெரிக்கா 10வது முறை தான் அனுப்ப முடிந்தது. ரஷ்யா 9வது முறை தான் வெற்றியுடன் அனுப்பியது. ஆனால் தமிழன் அனுப்பிய மங்கல்யான் அனுப்பிய முதல் முறையே செவ்வாய் கிரகத்திற்கு சென்று வெற்றிகரமாக ஆய்வு செய்து வருகிறது. இதற்கு இஸ்ரோ வில் இருந்த விஞ்ஞானிகள் தான் காரணம். நாதன், மயில் சாமி அண்ணாத்துரை, வீரமுத்துவேல், நாராயணன், சங்க ரன், வனிதா, ராஜராஜன், ஆசீர் பாக்கியராஜ், நிகர் ஷாஜி என்று தொடர்ச்சியாக தமிழக விஞ்ஞானிகள் தான் சாதித்துக் காட்டியுள்ளனர். அவர்களின் செயல்திறனைப் பாராட்டி தலா 25 லட்சம் தந்தவர் தமிழ்நாடு முதல்வர்.

அதுமட்டுமல்ல; சந்திரனுக்கு ஆர்ம்ஸ்ட்ராங், ஆல்டீ ரினை அனுப்பிய அமெரிக்கா அதில் தண்ணீர் இருப்பதற் கான சாத்தியக் கூறுகள் இல்லையென்றனர். ஆனால் தமி ழக விஞ்ஞானிகள் நிலவில் தண்ணீர் உள்ளது என்று கண்டுபிடித்தனர். இன்று 11.3.25 பத்திரிக்கைகள் நிலவில் பனிக்கட்டிகள் ஏராளமாக இருக்கிறது என்று சந்திராயான்3 செய்தியை வெளியிட்டுள்ளனர்.

இந்த தமிழ் விஞ்ஞானிகள் சி.பி.எஸ்.சி. பள்ளியிலா படித் தார்கள்? அல்லது தனியார் பள்ளியில் படித்தார்களா? எல் லோரும் அரசுப் பள்ளியில் தமிழில் படித்தவர்கள். இந்தியை அறவே அறியாதவர்கள்.

தர்மேந்திரபிரதானுக்கு வக்காலத்து வாங்கிப் பேசும் அண்ணாமலை; தி.மு.க.வினர் நேர்மையற்றவர்கள், நாக ரிகமற்றவர்கள் என்று கூறியதில் என்ன குறை கண்டீர்கள் என்று பேசி தனது மேதாவித் தனத்தை காட்டியுள்ளார்.

அண்ணாமலையே அவர் பேசியது தி.மு.க.வினரை அல்ல, தமிழர்களை என்பது ஏன் மறைத்துப் பொய் பேசுகி றீர்கள்? துணிவிருந்தால் தமிழர்களைத் தான் சொன்னார் என்று கூறிப் பாருங்களேன். அவர்களுக்கு வாக்களித்தவர் கள் தமிழர்கள் என்பதை ஏன் மறந்தீர்?

சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் இந்தி நடத்தப்படுவது தேசிய கல் விக் கொள்கையால் தான். நாங்கள் விரும்பி எங்கும் இந்தி யைக் கற்றுத்தர அனுமதிப்பதில்லை. இந்தியை யார் விரும் பிப் படிக்கிறார்களோ அது அவர்களின் தனிப்பட்ட உரிமை. ஆனால் இந்தியைத் திணிக்கலாம் என்றால் அது கடைசித் தமிழன் இருக்கும் வரை ஒருக்காலும் நடக்காது.

யார் அந்த சூப்பர் முதல்வர் என்று அண்ணாமலை கேட் டுள்ளார். காவல்துறை அதிகாரியாக இருந்தவர் தானே இந்த அறிவாளி. யார் அப்படி சொன்னாரோ அவர்தான் அதைச் சொல்ல வேண்டும் என்பதை அவர் அறியாரா? எங்களிடம் கேட்கிறார். எங்கள் முதல்வருக்கு மேல் இன்னொரு சூப்பர் முதல்வர் ஒருவர் இருப்பதாக சிண்டு முடிய பார்க்கிறீர்களா? சிண்டு எப்போதும் தி.மு.க.வினரிடம் இருக்காது.

உலகம் போற்றும் அறிவியல் அறிஞர் இந்திய குடியரசுத் தலைவராக இருந்த அப்துல்கலாம் என்ன இந்திப் படித்த வரா? சி.பி.எஸ்.சி. பள்ளியில் படித்தவரா? இராமேஸ்வரத்தி லுள்ள அரசுப் பள்ளியில் படித்தவர். பொக்ரான் அணுகுண் டால் இந்தியாவும் மற்ற நாடுகளுக்கு சவால் விடும் வண்ணம் திகழச் செய்தவர். தமிழில் அழகான கவிதைகள் வடித்தவர்.

அதேபோல் சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன் மற்றொரு குடியரசுத் தலைவர். திருத்தணியில் பிறந்தவர். தாய்மொழி தெலுங்காக இருந்தாலும் அரசுப் பள்ளியில் தமிழில் படித்த வர் தான். இவர் என்ன இந்திப் படித்து பட்டம் பெற்றவரா?

ஆர்.வெங்கட்ராமன் இந்திய குடியரசுத் தலைவராக இருந்தவர். பட்டுக்கோட்டை அருகே உள்ள ராஜாமடம் கிராம அரசுப் பள்ளியில் பயின்றவர் தான். பின்பு சென்னை அரசு சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றவர். இவர் என்ன இந்தியில் கல்வி கற்றவரா?

நோபல் பரிசு வென்ற சர்.சி.வி.ராமன் திருச்சியில் பிறந்த வர். அரசுப் பள்ளியில் தான் பயின்றவர். இந்தியில் படிக்க வில்லையே, சி.பி.எஸ்.சி பள்ளியிலோ, தனியார் பள்ளி யிலோ படிக்கவில்லையே!

1927லேயே "இந்தியின் ரகசியம்" என்று தனது குடியரசு நாளிதழில் அப்போதே இந்தியைக் கண்டித்து எழுதியதோடு தனது கடைசி தி.நகர் பொதுக் கூட்டத்திலும் தனி தமிழ்நாடு வேண்டுமென்று கேட்ட தந்தை பெரியார் அதிகம் படிக்கவில் லையென்றாலும் படித்தது அரசுப் பள்ளியில் தான். அவரை விட சிந்தனையாளரைக் காண முடியுமா?

பேரறிஞர் அண்ணா அறிவுச் சுரங்கம். அவர் படித்தது சி.பி.எஸ்.சி. பள்ளியில் இல்லையே! காஞ்சிபுரத்தில் அரசுப் பள்ளியில்தானே! அமெரிக்கா சென்று ஏல் பல்கலைக்கழகத் தில் அவரது அடுக்குமொழி ஆங்கிலப் பேச்சால் ஆங்கிலேய மாணவர்களை வியக்க வைத்தாரே! அண்ணாமலை பல்க லைக் கழகத்தில் அவர் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு ஈடு இணை உண்டா?

அறிஞர் அண்ணா திருக்குறளில் ஒரு குறள் "கற்க கசட றற் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக இதில் கற்க கசட றற் கற் பவை என்பதை அதாவது பாதி குறளை மட்டும் விளக்கம் தந்து ஒன்றரை மணிநேரம் பேசியுள்ளார். இப்படி பா.ஜ.க.வில் யாராலும் பேச முடியுமா? அண்ணாமலையே சந்தர்ப்பவசத்தால் அரசியல்வாதி ஆகிவிட்டீர்கள் உங்களா லும் முடியுமா?

முத்தமிழறிஞர் கலைஞர் அரசுப் பள்ளியில் படித்தவர் தான். 5 முறை முதல்வராக அமர்ந்து தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கவில்லையா? பல பிரதமர்களை உருவாக் கவில்லையா? அவரது சங்கத்தமிழுக்கு குறளோ வியத்திற்கும் இணையான இலக்கியத்தை இந்தியில் ஒன்றை கூற முடியுமா? இந்தியில் இலக்கியம் இருந்தால் தானே!

அண்ணாமலையே தர்மேந்திரபிரதான் செயலைப் புக ழாதீர்கள். நீங்கள் தமிழனாகப் பிறந்ததால் மக்கள் தண்டிக் காமல் இருக்கிறார்கள். பாருங்கள் 2026 தேர்தலில் தக்கப் பாடம் புகட்டுவார்கள்.

நேரு பிரதமராக இருந்த மமதையில் தமி ழர்களை நான்சென்ஸ் என்று கூறிவிட்டார். அதற்கு அண்ணா பெரிய மனிதர் நாவில் சிறிய வார்த்தைகள் என்று கூறினார். ஆனா லும் அவர் சென்னைக்கு வந்தபோது சந் தித்த அவலம், எதிர்ப்பு கொஞ்ச நஞ்சமல்ல தெரித்து ஓடினார். கருப்புப் கொடி நேருவைக் கதற வைத்தது.

பிரதமர் நரேந்திர மோடி தமிழர்களைப் பற்றிப் பேசிவிட்டு இராணுவ நிகழ்ச்சி ஒன் றில் கலந்து கொள்ள சென்னை வந்து சிறிது நேரம் கூட நிற்க முடியாமல் விரட்டியடிக்கப் பட்டதை மறந்து விட்டீரா? இது தான் தமிழரின் வீரம்.

காமராஜர் அவர்கள் முதல்வராக இருந்தபோது கம்யூ னிஸ்ட் கல்யாண சுந்தரம் ஆங்கிலம் வேண்டாம் என்று பேசினார். உடனே காமராஜர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த அண்ணா அவர்களை அழைத்து கல்யாணசுந்தரம் ஆங்கிலம் வேண்டாமென்கிறாரே அதை எடுத்து விட்டால் அந்த இடத்தில் இந்தி அல்லவா உட்கார்ந்து விடும். இது நடக் கக் கூடாது அவருக்கு அறிவுரை கூறுங்கள் என்றார். அந்த பெருந்தலைவர் காமராஜர் கொஞ்சம் படித்தவர் தான். சில பிரதமர்களை உருவாக்கியவர் தான். அவர் படித்த அந்த சிறு படிப்பும் அரசுப் பள்ளியில் தான். இந்தியை அவரும் எதிர்த்தவர் தான். இது ஏற்கனவே நான் குறிப்பிட்டிருந்த செய்தி தான். தற்காலத் தேவைக்காக மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்ணாமலையே இந்த வரலாறெல்லாம் எங்கே உங் களுக்குத் தெரியப் போகிறது. 1938, 1965, 1986 என்று மொழிப் போராட்டம் நடத்தி உயிர்த் தியாகம் செய்தவர்கள் தமிழர்கள். வரலாற்றைப் படியுங்கள். வடக்கத்தவனைப் போல் வம்பு பேசதீர்கள்.

தர்மேந்திரபிரதான் தமிழ்நாட்டிற்கு வரவேண்டியவர். ஏன் திடீரென ரத்து செய்தார்? துணிவிருந்தால் வரச் சொல் லுங்கள். இராணுவத்தை 1967லேயே சந்தித்து இன்னுயிர் ஈந்தவர்கள் தமிழர்கள். இப்போது மட்டும் உங்கள் இராணு வத்தை எதிர்கொள்ள மாட்டோமா?

90000 இராணுவ வீரர்களை அனுப்பியும் மணிப்பூரில் இன்னும் கலவரத்தை நிறுத்த முடியவில்லை. உங்கள் யோக்கியதையைப் பார்த்து நாடு சிரிக்கிறது. அமெரிக்கா போய் அழையா விருந்தாளியாக மோடி அதிபர் டிரம்பைப் பார்த்தார். என்ன பயன்? ஏப்ரல் 2 லிருந்து இந்திய பொருட்க ளுக்கு கூடுதல் வரி விதிப்பேன் என்கிறார் டிரம்ப். இந்தியர் களை கை கால்களில் விலங்கிட்டு குழந்தைகளைக் கூட இராணுவ விமானத்தில் கழிவறைக் கூட செல்ல விடாமல் சித்திரவதைக்கு ஆளாக்கி அனுப்பி வைத்தார் டிரம்ப். இதைக் கண்டித்து ஒரு வார்த்தைப் பேசினாரா பிரதமர் மோடி. இது 140 கோடி இந்தியர்களுக்கும் ஏற்பட்ட அவமா னம் தானே!

ரஷ்யாவிலிருந்து 10 லட்சம் கோடிக்கு கடந்த 8.03.25 அன்று கச்சா எண்ணெய் வாங்கியுள்ளீர்கள். இப்படித்தான் பல காலமாக குறைந்த விலையில் கச்சா எண்ணெய் வாங் குகிறீர்கள். பெட்ரோல் - டீசல் விலையை மட்டும் ஏன் குறைக்க மறுக்கிறீர்கள். சில மாதங்களுக்கு முன்பே இத னால் ரூ. 35 லட்சம் கோடி அதானி லாபம் அடைந்தார். இப்போது கணக்கு எடுத்தால் இன்னும் எத்தனை லட்சம் கோடியோ! இந்த பா.ஜ.க. அரசுதான் ஏழைகளுக்கான அரசா? ஏழைகள் விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அரசு.

உங்கள் ஆளும் இலட்சணம் ஆளுமைத் திறன் இப்படி இருக்க அண்ணாமலையே தர்மேந்திரபிரதானை மன் னிப்பு கேட்கச் சொல்லுங்கள்; இல்லையென்றால் பேசாமல் நாவை அடக்கிக் கொண்டு இருட்டறையில் போய் படுத்துக் கொள்ளுங்கள். தமிழினத் துரோகியென பெயர் எடுக்காதீர் கள். பா.ஜ.க.வின் அழிவின் தொடக்கம் ஆரம்பமாகி விட்டது.